2016

**Series JSR** **SET-4**

Code No. **10**

Roll No. | | | | | | | |

Candidates must write the Code on the title page of the answer-book.

- Please check that this question paper contains **24** printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains **17** questions.
- **Please write down the Serial Number of the question before attempting it.**
- 15 minute time has been allotted to read this question paper. The question paper will be distributed at 10.15 a.m. From 10.15 a.m. to 10.30 a.m., the students will read the question paper only and will not write any answer on the answer-book during this period.

## SUMMATIVE ASSESSMENT - II

# தமிழ்

# TAMIL

*கால அளவு : 3 மணி* *மொ. மதிப்பெண்கள்: 90*

*Time allowed : 3 hours* *Maximum Marks : 90*

**இக் கேள்வித்தாள் நான்கு பிரிவுகளை கொண்டது :**

**This question paper is divided into four Sections :**

| | | | |
|---|---|---|---|
| பிரிவு அ | : | படித்தல் (உரைநடைப்பகுதி) | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION A** | : | Reading Comprehension | *15 Marks* |
| பிரிவு ஆ | : | எழுதுதல் | *20 மதிப்பெண்கள்* |
| **SECTION B** | : | Writing | *20 Marks* |
| பிரிவு இ | : | இலக்கணம் | *15 மதிப்பெண்கள்* |
| **SECTION C** | : | Grammar | *15 Marks* |
| பிரிவு ஈ | : | இலக்கியம்/தமிழ்ப் பாடநூல்கள் | *40 மதிப்பெண்கள்* |
| **SECTION D** | : | Literature / Text Books | *40 Marks* |

குறிப்பு

தெளிவான கையெழுத்து, பிழையற்ற சொற்றொடர்கள், நேரிடையான விடைகள், சந்திப்பிழை தவிர்த்தல் ஆகியவை சிறந்த மதிப்பெண்கள் பெற வழிகாட்டும்.

பகுதி - அ

நம் நாட்டில் வார்த்தைகளில் வருணிக்கமுடியாத, கண்டுகளிக்கக்கூடிய, கற்பனையும் கலைநயங்களும் கொட்டிக்கிடக்கும் ஆலயங்களும், மலைக்கோயில்களும், குடைவரைக் கோயில்களும் காணும் இடமெல்லாம் காட்சிதருகின்றன. காணவிரும்பும் அனைவரும் கண்டதும் பண்டைய மக்களின் கடின உழைப்பையும், கற்பனை வனப்பையும் போற்றாதிருக்கமுடியாது. அத்தகைய வரலாற்றுக்கலைப்பெட்டகம் ஒன்றுதான் நெல்லையப்பர் திருக்கோயில்

1. இக்கோயில் 1300 ஆண்டுகள் பழமை வாய்ந்தது. நெல்லையப்பர், காந்திமதியம்மாள் இருவருக்கும் தனித்தனியே இருந்த கோயில் 1647-இல் வடமலையப்ப பிள்ளை என்பவரால் சங்கிலிமண்டபம் கட்டப்பட்டு இரண்டும் இணைக்கப்பட்டது. 14 ஏக்கர் பரப்பளவில் 850 அடி நீளம் 756 அடி அகலம் கொண்ட இத்திருக்கோயிலில் தாமிரசபை எனப்போற்றப்படும் நடராசர்கலை நடனக்கோலம் காணக் கண் கோடி வேண்டும். பாண்டிய மன்னர்களின் திருப்பணிகள் கல்லிலும் கலைவண்ணம் காட்டின. இசைத்தூண்கள் இக்கோயிலின் சிறப்பம்சமாகும். ஒரே கல்லில் 5

பத்துத் தூண்கள் அவற்றின் வேறுபட்ட இசையொலிகள் சிற்பிகளின் கலைநயம் இசைநயம் கற்பனைநயம் ஆகியவற்றை வெளிப்படுத்துவன. படித்துணர்வது இன்பம் தரும் என்றாலும் பார்த்துணரும் பாங்குக்குக்கு ஈடாகுமோ.

(i) நெல்லையப்பர் கோயில் எத்தனை ஆண்டுகள் பழமையானது ?

(அ) 300 ஆண்டுகள்

(ஆ) 500 ஆண்டுகள்

(இ) 1300 ஆண்டுகள்

(ஈ) 2000 ஆண்டுகள்

(ii) இக்கோயில் தூண்ககளின் சிற்ப்பம்சம் யாது ?

(அ) ஒரே கல்லில் 10 தூண்கள், இசைநயம், கலைநயம், கற்பனைநயம்

(ஆ) ஒரே கல்லில் 5 தூண்கள் சிறியவை

(இ) கல்களால் ஆன கலை அழகுத் தூண்கள்

(ஈ) பல கற்களால் ஆன கலை நயமிக்க தூண்கள்

(iii) இங்குவீற்றிருக்கும் அம்பாளின் பெயர் யாது ?

(அ) இந்துமதி

(ஆ) சந்திரமதி

(இ) கோமதி

(ஈ) காந்திமதி

(iv) கோயில் எத்தெனை ஏக்கர் பரப்பில் அமைந்திருக்கிறது ?

(அ) 10 ஏக்கர்

(ஆ) 15 ஏக்கர்

(இ) 7 ஏக்கர்

(ஈ) 14 ஏக்கர்

(v) படித்துணர்வதிலும் இன்பம் தருவது எது ?

(அ) நினைத்துணர்வது

(ஆ) அப்படியே மறப்பது

(இ) பார்த்துணர்வது

(ஈ) சோதித்து உணர்வது

2. உலகில் உள்ள சுவையான மீன்களில் முதன்மையானது அலாஸ்காவின் தேசீய மீனான கிங் சால்மன் ஆகும். அலாஸ்கா அரசின் வருமானத்திற்கு அதிகமாக உதவும் இம்மீன் நல்லநீரில் உற்பத்தியாகிறது. பிறந்த சில மாதங்களில் பல்லாயிரம் மையில்கள் பயணம் செய்து கடலை அடைகிறது. மூன்று நான்கு ஆண்டுகளுக்கு பிறகு மீன்பிடிப்போர் கரடிகள், பருந்துகளிடமிருந்து தப்பிபிழைத்து கூட்டம்கூட்டமாக அருவி வேகம் எதிர்படும்போது மேல்நோக்கிப்பாய்ந்து செல்வது கண்ணுக்கினியதான காட்சியாகும். கிரிஸ்லிகரடிகள் மீன்பிடிக்கப்படும் பாடு மற்றொரு அரிய காட்சி. சால்மன் மீன் சுமார் 10000 முட்டைகள் இடும். இதற்காக நூற்றுகணக்கான மைல்கள் நீந்தவேண்டும். முட்டைகளைப் பெண்மீன்களும் ஆண்மீன்களும் காக்கும். பெரிய சால்மன் மீன்கள் பொறிந்த தன் பிறந்த குஞ்சுகளைப் பார்த்தபடியே இறந்து விடும். 5

(i) அலாஸ்காவிற்கு வருமானத்திற்கு அதிகம் உதவுவது எது ?

(அ) அந்நாட்டு மக்கள் வரிப்பணம்

(ஆ) தங்கம்

(இ) வைரம்

(ஈ) கிங்சால்மன் மீன்கள்

(ii) இவ்வகை மீன்கள் (கிங்சால்மன்) எங்கு உருவாகிறது ?

(அ) குளங்களில்

(ஆ) கடலில்

(இ) நல்லநீரில்

(ஈ) கிணறுகளில்

(iii) எவ்வகை மிருகம் இம்மீன்களை உண்ணும் ?

(அ) நீர்நாய்கள்

(ஆ) கிரிஸ்லி கரடிகள்

(இ) சிங்கங்கள்

(ஈ) புலிகள்

(iv) சால்மென் மீன்கள் சுமாராக எத்தனை முட்டையிடும் ?

(அ) 2000

(ஆ) 4000

(இ) 6000

(ஈ) 10000

(v) பெரிய சால்மன் மீன்கள் இறப்பு எவ்வாறு நிகழும் ?

(அ) எதிரிகளால்

(ஆ) மீன்பிடிப்பவர்களால்

(இ) வயதானதால்

(ஈ) பிறந்த தன்குஞ்சுகளைப் பார்த்தபடியே.

3. தற்போது நாம் கணக்கிடப்பயன்படுத்தும் கால்குலேட்டர் கருவியின் முன்னோடி பிளேய்ஸ் பாஸ்கல் ஆவார். 1623-ஆம் ஆண்டு ஜூண் 18-ஆம் நாள் பிரான்ஸில் கிளர்மாண்டுஃபெரென்ட் என்ற இடத்தில் பிறந்தார். நீர்மங்களின் பண்புகள் பற்றிய ஆய்வுகளிலும் ஈடுபட்ட பாஸ்கல் அறிவியலறிஞர் டாரிசெல்லியின் ஆய்வுகளை விரிவுபடுத்தி அழுத்தம் மற்றும் வெற்றிடம் தொடர்பான கொள்கைகளைத் தெளிவுபடுத்தினார். கணிதத்தில் வடிவியல் மற்றும் நிகழ்தகவு கோட்பாடுகள் தொடர்பாகவும் ஆய்வுசெய்த பாஸ்கல் கணிப்பொறிவடிவமைப்புக்கு முன்னோடியாக விள்ங்கிய பாஸ்கலைன் என்ற கருவி கூட்டல் கழித்தல் வேலைகளை மட்டும் செய்யக்கூடியதாகும். 5

ஜெர்மனியில் டிரஸ்டன் என்ற இடத்தில் உள்ள ஜூவிங்கர் அருங்காட்சி- யகத்தில் பாஸ்கல் வடிவமைத்த கால்குலேட்டர் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது. தந்தையிடமே அவர் கல்வி பயின்றார். பிளேய்ஸ் பாஸ்கல் நினைவாக அழுத்தத்திற்கான எஸ்.ஐ யூனிட்டிறிகு பாஸ்கல் பெயொ் இடப்பட்டுள்ளது. இவர் 1662 ஆகஸ்ட் 19-ஆம் நாள் தன் 39 வயதில் காலமானார்.

(i) கால்குலேட்டர் கருவியின் படைப்பில் முன்னோடியார் ?

(அ) ஆர்க்கிமெடிஸ்

(ஆ) கலீலியோ

(இ) பிளேய்ஸ் பாஸ்கல்

(ஈ) எடிசன்

(ii) பிளேய்ஸ் பாஸ்கல் எந்நாட்டிற்பிறந்தவர் ?

(அ) இந்தியா

(ஆ) இத்தாலி

(இ) ஜப்பான்

(ஈ) பிரான்ஸ்

(iii) பிளேய்ஸ் பாஸ்கல் கண்டுபிடித்த கால்குலேட்டர் எந்நாட்டில் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது ?

(அ) ஜெர்மனியில்

(ஆ) ஆப்பிரிக்காவில்

(இ) பிரான்ஸ்நாட்டில்

(ஈ) சீனாவில்

(iv) பிளேய்ஸ் பாஸ்கல் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தார் ?

(அ) 25

(ஆ) 30

(இ) 39

(ஈ) 60

(v) பாஸ்கலின் ஆசிரியர் யார் ?

(அ) அவரது தாய்

(ஆ) அவரது நண்பர்

(இ) அவரது தந்தை

(ஈ) பாஸ்கலின் தாத்தா

## பகுதி - ஆ

4. உடல் சீராக விளங்க உணவுப்பழக்கமும், உடற்பயிற்சிகளும் தேவை என்பதை உனது உடன்பிறப்பிற்கு எடுத்துக்கூறும் கடிதம். 8

**அல்லது**

நீ வாழும் பகுதியில் அஞ்சல்பெட்டி அமைத்துத்தர அஞ்சலகத் தலைமை மேலாளருக்கு வேண்டுகோள் கடிதம்.

கடிதத்தில் உனது முகவரி அரவிந்தன் (அல்) பூரணி, எண்3, கம்பர் தெரு,சோமசுந்தரம் குடியிருப்பு, மதுரை எனக் கொள்க.

5. பின்வரும் பகுதிகளில் ஏதேனும் ஒரு பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைக் கொண்டு கட்டுரை எழுதுக. 8

செல்வம் – சேமிப்பும் செலவும் – திட்டமிட்ட சேமிப்புகளில் முதலீடு – நம்பிக்கைதரும் அரசு சேமிப்புத்திட்டங்கள் – அதிக வருமானம் தருவதாக ஆசை காட்படுத்தும் தனியார் சேமிப்புத் திட்டங்களில் எச்சரிக்கயுடன் இருத்தல் – எதிர்காலத்தில் வளமாக வாழ வழி வகுத்தல்.

முதியவர்கள் சமுதாயத்தின் ஆணிவேர் – தற்காலக்குடும்பச்சூழல் – சகிப்புத்தன்மை குறைந்துவரும் சமுதாயம் – முதியோர் இல்லங்கள் பெருகுதல் – பாசத்திற்கு ஏங்கும் முதியோர் – நேசக்கரம் நீட்டவேண்டிய இளையசமுதாயம் – சமுதாயக் கொள்கையில் புரட்சி காணல்.

உணவுபொருளின் தேவை – விளைநிலங்கள் வீட்டுமனைகள் ஆதல் – நீர் ஆதார ஏரிகள் குளங்கள் அழிக்கப்படுதல் – நீர்வள ஆதாரங்கள் சீர்கெடுதல் – எதிர்காலம் கருதி இயற்கை வளங்களைப்பேணுதல் – உணவும் நீரும் வளம் பெற்றிடத் திட்டமிடல்,செயல்படல்.

6. பிளாஸ்டிக் (நெகிழி) பயன்பாட்டைப் படிப்படியாகக் குறைக்க நீ வாழும் பகுதியில் நடந்த தொண்டு நிறுவனத்தின் முகாம் பற்றி எழுதுக. 4

அல்லது

உடல் உறுப்பு தானம் செய்வதில் மக்களின் மூடநம்பிக்கைகளை நீக்க நீ வாழும் பகுதியில் மருத்துவர்குழு நடத்திய விளக்க முகாம் பற்றி அறிககை எழுதுக.

பகுதி - இ

7. சான்று தருக. (மூன்றுமட்டும்) 3

(i) புறத்திணைகள் மொத்தம் எத்தனை வகைகள் ?

(அ) ஐந்து

(ஆ) ஏழு

(இ) பத்து

(ஈ) பண்ணிரண்டு

(ii) தோன்றல் விகாரம்.

(அ) மலர் + விழி

(ஆ) வாழை + பழம்

(இ) பல் + பசை

(ஈ) வாள் + போர்

(iii) கூவிளங்காய்.

(அ) துப்பாய

(ஆ) பசும்புல்

(இ) கண்டவற்றுள்

(ஈ) வாய்மையி

(iv) எற்பாடு என்பதற்குரிய நேரம்.

(அ) இரவு 10 மணிமுதல் 2 மணிவரை

(ஆ) பகல் 2 மணிமுதல் 6 மணிவரை

(இ) காலை 6 மணிமுதல் 10 மணிவரை

(ஈ) மாலை 6 மணிமுதல் இரவு 10 மணிவரை

(v) சொற் பின் வருநிலை யணி.

(அ) தேவர் அனையர் கயவர் அவரும் தாம்
மேவன செய்தொழுக லான்

(ஆ) நாகமது நாகமுற நாகமென நின்றான்

(இ) வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்பிறுவர்

(ஈ) ஆவலுடன் பாவலரும் ஆறுகால் வண்டினமும்
காவலரைச் சூழும் கலசையே - மேவும்

8. நிரப்புக.(**மூன்றுமட்டும்**) 3

(i) வினைத்தொகையில் ________ மிகாது.

(அ) இடையினம்

(ஆ) வல்லினம்

(இ) மெல்லினம்

(ஈ) ஆய்தம்

(ii) வெண்பா ________ பிறழாமல் வரும்.

(அ) ஒன்றியவஞ்சித்தளை ஒன்றாவஞ்சித்தளை

(ஆ) இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும்

(இ) கலித்தளையும் ஆசிரியத்தளையும்

(ஈ) வஞ்சித்தளையும் கலித்தளையும்

(iii) ________ மாதங்கள் கார் காலத்திற்குரியவை.

(அ) ஆனி ஆடி

(ஆ) ஆவணி புரட்டாசி

(இ) மாசி பங்குனி

(ஈ) மார்கழி தை

(iv) கருப்பொருள்கள் மொத்தம் ________ வகைப்படும்.

(அ) இருவகை

(ஆ) ஐவகை

(இ) பதினான்கு

(ஈ) நான்கு

(v) பெருந்திணை என்பது________.

(அ) அன்பின் ஐந்திணை

(ஆ) ஒருதலைக் காமம்

(இ) பொருந்தாக் காமம்

(ஈ) அன்புடைக் காமம்

9. கூறியவாறு செய்க.(**மூன்று** மட்டும்)

(i) பசுமை + அடை புணர்ந்தால்.

(அ) பச்சடை

(ஆ) பாசடை

(இ) பசுமையடை

(ஈ) பாச்சடை

(ii) கற்பவை கற்றபின் - தளைகூறுக

(அ) கலித்தளை

(ஆ) வெண்சீர் வெண்டளை

(இ) வஞ்சித்தளை

(ஈ) இயர்சீர் வெண்டளை

(iii) பீலிபெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டம்

சால்மிகுத்துப் பெயின் --எவ்வகை அணிக்கு எடுத்துக்காட்டு ?

(அ) சிலேடையணி

(ஆ) வஞ்சப்புகழ்ச்சி

(இ) பிறிதுமொழிதல் அணி

(ஈ) பொருட்பின் வருநிலையணி

(iv) அஃதிலார் --வாய்பாடு கூறுக.

(அ) தேமா

(ஆ) கருவிளம்

(இ) கூவிளம்

(ஈ) புளிமா

(v) வடமலை - பிரித்தெழுதுக.

(அ) வடக்கு + மலை

(ஆ) வட + மலை

(இ) வடம் + மலை

(ஈ) வடை + மலை

3

10. இலக்கணக்குறிப்புத் தருக. (மூன்று மட்டும்)

(i) தமிழ் மணம்.

(அ) தோன்றல் விகாரப் புணர்ச்சி

(ஆ) திரிதல் விகாரப் புணர்ச்சி

(இ) இயல்புப் புணர்ச்சி

(ஈ) கெடுதல் விகாரப் புணர்ச்சி

(ii) பயனுடைய.

(அ) புளிமாங்காய்

(ஆ) புளிமாங்கனி

(இ) கருவிளங்காய்

(ஈ) தேமாங்காய்

(iii) நெஞ்சம் **படபட** வென அடித்தது.

(அ) புணர்ச்சியில் இரட்டைகிளவியில் வல்லினம் மிகாது

(ஆ) புணர்ச்சியில் அடுக்குத்தொடரில் வல்லினம் மிகாது

(இ) புணர்ச்சியில் விகாரப்புணர்ச்சி

(ஈ) திரிதல் விகாரப்புணர்ச்சி

(iv) நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்

நீங்கின் அதனைப் பிற

(அ) தற்குறிப்பேற்ற அணி

(ஆ) இரட்டுற மொழிதல் அணி

(இ) பிறிது மொழிதல் அணி

(ஈ) வஞ்சப்புகழ்ச்சியணி

(v) காடும் காடு சார்ந்த நிலமும்.

(அ) முல்லை

(ஆ) பாலை

(இ) நெய்தல்

(ஈ) குறிஞ்சி

11. சரியான சொற்றொடரைத் தேர்ந்து எழுதுக.(மூன்று மட்டும்)

(i) வெட்சிப்பூ சூடிச்செல்வது பகைவர் நாட்டின் மீது படையெடுத்தல்.

வெட்சிப்பூ சூடிச்செல்வது பகைவர் நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து வரச்செய்தல்.

வெட்சிப்பூ சூடிச்செல்வது பகைவர் கவர்ந்த பசுக்களை மீட்டல்.

வெட்சிப்பூ சூடிச்செல்வது பகைவரை வென்று வெற்றிவிழாக் கொண்டா- டுதல்.

(ii) விகாரப் புணர்ச்சி இருவகைப் படும்.

விகாரப் புணர்ச்சி நால்வகைப் படும்.

விகாரப் புணர்ச்சி மூன்றுவகைப் படும்.

விகாரப் புணர்ச்சி இல்லபாகப் புணர்வது.

(iii) நிலமாகிய முதற்பொருள் மூவகைப்படும்.

நிலமாகிய முதற்பொருள் ஐவகைப்படும்.

நிலமாகிய முதற்பொருள் ஆறுவகைப்படும்.

நிலமாகிய முதற்பொருள் பதினெட்டு வகைப்படும்.

(iv) வெண்பாவுக்கு உரிய ஓசை அகவலோசை.

வெண்பாவுக்கு உரிய ஓசை துள்ளல் ஓசை.

வெண்பாவுக்கு உரிய ஓசை செப்பலோசை.

வெண்பாவுக்கு உரிய ஓசை தூங்கல் ஓசை.

(v) வியங்கோள் வினைமுற்றின்முன் இயல்பாகப்புணர்ந்திடும்.

வியங்கோள் வினைமுற்றின்முன் வல்லினம் மிகும்.

வியங்கோள் வினைமுற்றின்முன் வல்லினம் மிகாது.

வியங்கோள் வினைமுற்றின்முன் விகாரப்புணர்ச்சி ஏற்படும்.

## பகுதி - ஈ

12. உரைநடைப் பகுதியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

மணிமேகலையின் தோழி சுதமியின் தந்தையை மாடுமுட்டியது. புத்தத்துறவியர் சரிந்த குடலை சரிசெய்ததை மணிமேகலை எடுத்துரைக் கின்றது.புல்லாகிப்பூடாய் எனும் திருவாசக வரிகள் உயிர்களின் பரிணாம வளர்ச்சியை விரிவாய்க் கூறுகின்றன. மானுடபிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில்கிருமி செருவானில் பிழைக்கும் எனும் அடிகள் கருவியல் அறிவை நன்கு தெரிவிக்கின்றன. அறிவியல் அறிஞர்கள் இலக்கிய அறிவுடன் இவற்றை ஆராய்ந்தால் மேலும் அரிய பல செய்திகளைத் தமிழகம்பெற ஏதுவாகும்.

(i) மணிமேகலையின் தோழியின் தந்தையை எது முட்டியது ?

(அ) ஆடு

(ஆ) யானை

(இ) மாடு

(ஈ) காட்டெருமை

(ii) உயிரின் பரிணாம வளர்ச்சியை எந்நூல் வரிகள் விளக்குகின்றன ?

(அ) சீறாப்புராணம்

(ஆ) தேவாரம்

(இ) கலித்தொகை

(ஈ) திருவாசகம்

(iii) மானுடப்பிறப்பினுள் மாதா உதரத்து ஈனமில் கிருமி செருவானில் பிழைக்கும் என்னும் அடிகளால் எது அறியப்படுகிறது ?

(அ) தமிழரின் விண்ணியலறிவு

(ஆ) மண்ணியலறிவு

(இ) பகுத்தறிவு

(ஈ) கருவியல் அறிவு

(iv) சரிந்த குடலைச் சரிசெய்தவர் யார் ?

(அ) இன்றை மருத்துவர்கள்

(ஆ) சமணத்துறவிகள்

(இ) புத்தத்துறைவிகள்

(ஈ) இந்துமதத்துறைவிகள்

(v) உயிரியல், அறிவியல், மருத்துவச்செய்திகள் திருவாசகத்தில் எவ்வாறு கிடக்கின்றன ?

(அ) அங்கொன்றும் இங்கொன்றுமாய்

(ஆ) விரவி

(இ) குறிப்புகளாக

(ஈ) கதைகளில்

13. பின்வரும் உரைநடைப் பகுதியைப்படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

தமிழ்நாடு தொன்மையும் சிறப்பும் வாய்ந்தது. முதல் மாந்தன் தோன்றிய இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர். தமிழகம் இன்றுபோல்

அல்லாது குமரிமுனைக்கு தெற்கே விரிந்து குமரிமலை,பஃறுளி ஆறு முதலியவற்றை உள்ளடக்கி இருந்தது என்கிறது சிலப்பதிகாரவரிகள். புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் திங்களொடும் செழும்பரிதி தன்னொடும் விண்ணொடும் உடுக்களோடும் மங்குகடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் எனப் பெருமிதத்துடன் பாடுகிறார். தமிழினம் தனக்குவமையில்லாத ஒரு தனி இனம். உயர்ந்த பண்புகளால் சிறந்திருந்தினர். உழவையும் தொழிலையும் மதித்தனர் வினையை ஆடவரின் உயிராகக் கருதினார். சான்றோனாதலே கல்வியின் முடிவெனப் போற்றினார். விருந்தெதிர் கொண்டு வாழ்ந்தனர் புகழுக்காக உயிரையும் கொடுக்க முன் வந்தனர் பழியெனில் உலகைப் பெறவும் மறுத்தனர். ஈந்து உவந்து இன்பம் கண்டனர்.

(i) தமிழர்கள் எதில் இன்பம் கண்டனர் ?

(அ) போரில்

(ஆ) விருந்தெதிர்கண்டு

(இ) ஈந்து உவந்து

(ஈ) கல்வியால்

(ii) பஃஃறுளி ஆறு பற்றிய செய்தியைக் கூறும் நூல் எது ?

(அ) திருக்குறள்

(ஆ) மணிமேகலை

(இ) சிலப்பதிகாரம்

(ஈ) வளையாபதி

(iii) பரிதி என்பதன் பொருள் யாது ?

(அ) விண்மீன்

(ஆ) சந்திரன்

(இ) வானம்

(ஈ) சூரியன்

(iv) தமிழர் எவற்றை மதித்தனர் ?

(அ) வீரத்தையும் போர் செய்யும் தன்மையையும்

(ஆ) உழவையும் தொழிலையும்

(இ) புகழை

(ஈ) தனக்குவமையில்லாத நிலையை

(v) இலெமுரியாக் கண்டம் எவ்வாறு போற்றப்படுகிறது ?

(அ) உலகத்தின் நாகரிகத் தொட்டில்

(ஆ) தென் தமிழகம்

(இ) பழைமையானது

(ஈ) அழகானது

4

14. பின்வரும் செய்யுட் பகுதியைப் படித்துப் பல்விடை வினாக்களுக்கு விடை தருக.

இன்றிளைப் பாறுவம் என்றிருந்தால் - வழி

என்னென்ன வாகுமோ ஓரிரவில்

சென்றிளைப் பாறுக முற்றிடத்தே - தம்பி

தேன்வந்து பாயும் உன் நெஞ்சிடத்தே

சாதனைப் பூக்களை ஏந்துமுன்னே - இங்கு

நல்லசெடி இளைப்பாறிடுமோ ?

வேதனை யாவும் மறந்துபார் - செடி

வெற்றி கொண்டேந்திய பூவானிலே.

(i) இளைப்பாறுவம் என்றிருத்தல் கூடாது. ஏன் ?

(அ) உழைப்பே உயர்வு

(ஆ) ஓர் இரவுக்குள் ஏற்படும் மாற்றம் எப்படி இருக்குமோ தெரியாது

(இ) காலம் பொன்போன்றது

(ஈ) மனம் ஒரு குரங்கு

(ii) நல்லசெடி இளைப்பாறு வது எப்போது ?

(அ) நல்லவேர் ஊன்றி வளர்ந்திடும்போது

(ஆ) தோட்டக்காரன் பராமரிப்பில்

(இ) சாதனைப் பூக்களை ஏந்திடும்போது

(ஈ) மற்றச்செடிகள் பட்டுப்போகும்போது

(iii) வெற்றிகொண்டேந்திய பூவினால் ஏற்படும் உணர்வு யாது ?

(அ) சாதனைச் சிரிப்புண்டாகும்

(ஆ) வேதனையாவும் மறந்துபோம்

(இ) மற்றவரால் போற்றப்படுவது

(ஈ) மண்வயல் பாராட்டிடும்பண்பு

15. பின்வரும் உரைநடை வினாக்களில் **இரண்டு** வினாக்களுக்கு விடை விளக்கமாகத்தருக. 10

(i) வள்ளலார் ஒரு புரட்சித் துறவி என்பதை விளக்குக.

(ii) பண்டைத்தமிழரின் மருத்துவ அறிவை விவரி.

(iii) தொன்மைத் தமிழகம் என்னும் ஊரை நடைப்பகுதி கூறும் இசைக்கலை பற்றி விவரி.

(iv) உலகம், ஞாலம், வறிது நிலைஇய ஞாலம் வலவன் ஏவா வானூர்தி எனும் சொற்களும் தொடர்களும் விளக்குவதை விவரி.

(v) 'எளிமை ஓர் அறம்' என்ற கொள்கைவழி காந்தி வாழ்ந்ததை விவரி.

16. எவையேனும் **இரு** செய்யுள் வினாக்களுக்கு விடை தருக. 8

(i) பொருளின் சிறப்பையும், பொருளீட்டும் நெறியினையும் விவரி.

(ii) புலி இருக்குமிடம்,அதன் தோற்றம், அதன் வெறிச்செயலை உமறுப்புலவர் கூறும் வகையில் விவரி.

(iii) கலித்தொகை ஆசிரியர் யார் ? அவர் அனைவரும் பின்பற்ற வேண்டிய நெறிமுறைகளாகக் கூறியவை யாவை ?

(iv) தமிழைப் பயிராய் உருவகப்படுத்தித் தமிழ்விடுதூது கூறுவதை விவரி.

17. ஏதேனும் **ஒரு** தலைப்பில் துணைநூல் கட்டுரை எழுதுக. 8

(i) குறட்டை ஒலி.

(ii) நூலகங்களும், வகைகளும், பயன்களும்.

(iii) அயோத்தி தாசரின் சமுதாயத் தொண்டுகளை விளக்குக.